**செ.வெ. எண்: 061** **நாள்:30.01.2017**

# சிறு தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனை மையம்

தமிழக அரசின் நிறுவனமான தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (www.editn.in) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் 2016–17 ஆம் ஆண்டில் முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) அறிவித்தார். மேலும் தமிழக அரசு வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) மற்றும் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) நடைமுறைபடுத்துகிறது.

புதியதாக தொழில் தொடங்கும் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை ஆதரவு கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது குறு மற்றும் சிறு தொழில் செய்யும் தொழில் முனைவோர்கள் நிதி மேலாண்மை வரிகள், வாடிக்கையாளர்களை கையாளுதல், வருவாயைப்பெருக்குதல் மற்றும் செலவினங்களை கட்டுப்படுத்துதல் போன்றவற்றில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள ஆலோசனைகள் வழங்குவது அவசியமாகும்.

இவ்வாறு தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மையத்தை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும், பாரதிய யுவ சக்தி அறக்கட்டளை (BYST) யும் இணைந்து ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை கூட்டம் நடத்த உள்ளது. நிதி, வங்கி மற்றும் மேலாண்மை துறையில் 3 வல்லுனர்கள் தொழில் முனைவோர்கள் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகள் வழங்குவார்கள். தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் தொழில் முனைவோர் நூலகம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் வழிகாட்டி மையம் ஆகியவற்றிலுள்ள தொழில் திட்ட அறிக்கைகளையும் பயன்படுத்தி தங்களது திட்ட அறிக்கைகளை தயாரித்துக்கொள்ளலாம்.

இம்முகாம்கள் ஜீன் 2016 முதல் நடைப்பெற்று வருகிறது. இதுவரை இம்முகாம்களில் இதுவரை சுமார் 596 தொழில் துவங்க விரும்புவோர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர். பிப்ரவரி 2017 மாதத்திற்க்கான முகாம் 5, 12, 19 மற்றும் 25 தேதிகளில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600032 என்ற முகவரியில் மாலை 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது. மேலும் தகவலுக்கு துணை இயக்குநர் அவர்களை மின் அஞ்சல்: ddp@editn.in, 044–22252081 (வேலை நாட்களில் காலை 10,00 முதல் மாலை 6.00 மணி வரை) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**